**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 417/2023**

Deposition of the witness for DW 1
Name : **சீனிவாசன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (24.04.2026)

**சாட்சி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதின்பேரில் முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நானும், புகார்தாரரும் பள்ளியில் ஒன்றாக படித்து வந்தோம் அதன்படி புகார்தாரை எனக்கு தெரியும். நான் 20.12.2020 தேதியில் புகார்தாருக்கு எந்த புரோநோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை. மனுதாரர் புரோநோட்டுக்காக வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பி உள்ளார். அதற்கு நான் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளேன். அந்த பதில் அறிவிப்பு **எ.ம.சா.ஆ.2** ஆகும். நான் 09.03.2023 தேதியில் காசோலை நிரப்பி கையொப்பம் செய்து புகார்தாரரிடம் கொடுக்கவில்லை. கடந்த 2019 ஆம் வருடம் எனது பெயரில் புகார்தாரருக்கு ஃபோர்பிஎஸ் கார் வாங்கி கொடுத்தேன். அதற்கு ஒரு லட்சம் ரூபாய் பணம் கொடுத்தார். அதனை பல தவணைகளில் திருப்பி கொடுத்துவிட்டேன். அதற்கான ஆவணங்களை ஏற்கனவே நான் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யும் பொழுது தாக்கல் செய்துள்ளேன். அந்த கார் ஆனது திண்டுக்கல் பைபாஸில் செல்லும் பொழுது விபத்திற்குள் ஏற்பட்டு இருந்தது அதனை நான் தான் போய் எடுத்து வந்தேன். கார் எனது பெயரில் இருப்பதால் அந்த விபத்து வழக்கு எனது பெயரில் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கு முடிந்து விட்டது. அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் இழப்பீடு தொகை எதுவும் எனக்கு கொடுக்கவில்லை.

நான் புகார்தாரரிடம் நண்பர் என்ற அடிப்படையில் 2019 ஆம் வருடம் கொடுத்த நிரப்பப்படாத காசோலை வைத்து இந்த வழக்கினை பதிவு செய்துள்ளார்கள். இந்த வழக்கில் காசோலை அக்கவுண்ட் குளோஸ் என்று திருப்பப்பட்டது. அந்த அக்கவுண்ட் குளோஸ் செய்யப்பட்ட விவரம் புகார்தாரருக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும். இந்த காசோலை வழக்கிற்கு புகார்தாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதற்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பு **<u>எ.ம.சா.ஆ.3</u>** ஆகும். புரோ நோட்டீர்க்காக நான் அனுப்பிய பதில் அறிவிப்பு மற்றும் காசோலை வழக்கில் நான் அனுப்பிய பதில் அறிவிப்பு ஆகியவற்றை இந்த வழக்கில் புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர் காசோலை வழக்கில் அனுப்பிய அறிவிப்பில் நவநீதகிருஷ்ணனும், புகார்தாரரும் எனது வீட்டிற்குள் வந்ததாகவும், நான் புரோநாட்டை கிழித்துவிட்டு அதற்கு எதிராக காசோலை கொடுத்ததாக கூறியுள்ளார்கள் அன்று எனது வீட்டிற்கு யாரும் வரவில்லை. நான் பணம் எதுவும் அவர்களிடம் வாங்காததால் காசோலை அன்றுகொடுக்கவில்லை சமாதானம் எதுவும் பேசவில்லை. நானும் சமாதானம் பேச தயாராக இல்லை. நான் புகார்தாரரிடம் புரோநாட்டிற்காக பணம் எதுவும் வாங்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. அதற்கான அவசியமும் இல்லை. EP வழக்கில் நான் ஏதாவது இழப்பீடு செட்டில் செய்யுங்கள் என்று கேட்டதால் அதில் ஏற்பட்ட மனகசப்பினால் இந்த வழக்கு 2019 ஆம் வருடம் பாதுகாப்பிற்காக கொடுத்த நிரப்பப்படாத காசோலையை வைத்து தற்போது இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate,
Shenkottai